# செய்தி குறிப்பு

ஒவ்வொரு வருடமும் **15.07.2021** அன்று உலக இளைஞர் திறன் தினம் அனுசரிக்கப்படுகிறது. உலக இளைஞர் திறன் தினத்தை முன்னிட்டு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்ககத்தில் 15.07.2021–அன்று நடைபெற்ற விழாவில் சிறப்பு விருந்தினராக மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் காணொலி வாயிலாக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அமைச்சர் அவர்கள் தமது உரையில் திறன் பயிற்சியின் முக்கியத்துவம் அதன் மூலம் கிடைக்கும் வேலைவாய்ப்பு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆகியவற்றால் வழங்கப்படும் பல்வேறு குறுகிய கால மற்றும் நீண்ட கால பயிற்சிகள், இப்பயிற்சிகளுக்கென அரசால் வழங்கப்படும் சலுகைகள் மற்றும் நிதிகள் குறித்து விரிவாக உரையாற்றினார். மேலும், தற்போது தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கை நடைபெற்று வருகிறது. இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு அமைச்சர் அவர்கள் பொதுமக்களை கேட்டுக் கொண்டார்.

மேலும், தமிழ்நாட்டின் இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் வழங்கப்படும் பல்வேறு திறன் பயிற்சிகளை கண்டறிந்து, அவர்களுக்கு தேவையான உரிய பயிற்சிகளை பெற்று வேலைவாய்ப்பினை பெருக்கி கொள்ளுமாறும், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அமைச்சர் அவர்கள் மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இவ்விழாவில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் இயக்குநர் திரு.கொ.வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை வழங்கினார், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமை உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் உயர் அதிகாரிகள், சார்நிலை அலுவலர்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக உயர் அலுவலர்கள், தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள், மாநிலத்தின் பல்வேறு பகுதியிலிருந்து திறன் பயிற்சி பெறுபவர்கள், திறன் பயிற்றுவிப்பவர்களும், வேலைநாடுநர்களும் என **500**–க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இயக்குநர்